## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு.அமர் குஷ்வாஹா, இ.ஆ.ப.,

ந.க.பஅ3/11876/2016, நாள்: 07.02.2022

பொருள்: பணியமைப்பு - திருப்பத்தூர் மாவட்டம் - சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - இரவு காவலராக பணிபுரிந்த திரு.தி.கண்ணப்பன் என்பவர் 27.07.2016 அன்று பணியிடை காலமானது வாரிசுதாரர்/ மகன் திரு.க.நவீன்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - 11.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்தது - விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
(1) வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.பஅ3/11876/2016, நாள்: 04.03.2019
(2) அரசாணை (நிலை) எண்: 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்: 26.02.2021.
(3) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் எண் 18355/2021/டி2 நாள்: 18.12.2021.
(4) அரசு கடித எண் 6895/இ3/2021-5 நாள்: 14.12.2021.

<<<<<>>>>>

**ஆணை:**

திருப்பத்தூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இரவு காவலராக பணிபுரிந்து 27.07.2016ம் தேதி அன்று பணியிடை காலமான திரு.தி.கண்ணப்பன் என்பவரின் வாரிசுதாரர் /மகன் திரு.க.நவீன்குமார் என்பவருக்கு பார்வை (1ல்) கண்ட செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் 11.03.2019 முற்பகல் ஊர்நல அலுவலர் நிலை -II ஆக பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை (2)ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத பணியாளர்களின் பணிநியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher than the appointing authority) கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (3)ல் கண்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் கடிதத்துடன் வரப்பெற்ற அரசு கடித எண்6895/இ3/2021-5 நாள்: 14.12.2021-ல் "இளநிலை உதவியாளர்" பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளதின் பேரில், பார்வை (4)ல் கண்ட கடிதத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.க.நவீன்குமார் என்பவருக்கு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டு, இவர் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்கள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டதென சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்:

திரு.க.நவீன்குமார்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம், கந்திலி. --------------- உரிய வழிமுறையாக

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், கந்திலி.(சார்வு செய்து சார்வு நகல் அனுப்பும் பொருட்டு)

நகல்: "பஅ3" இருப்பு கோப்பிற்கு.